**சுருக்கம்**

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணி – பயிற்சி பிரிவு – வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை – பணியிடை மரணமடைந்த திரு.எஸ்.ராஜேந்திரன் (இருட்டறை உதவியாளர்) அவர்களின் மனைவி திருமதி.ச.புவனேஸ்வரி என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தமிழ்நாடு அமைச்சுப் பணியில் நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(ப்பி2)த்துறை**

அரசாணை (ப) எண்.329 நாள் 10.07.2020

சார்வரி வருடம் – ஆனி 26,
திருவள்ளுவர் ஆண்டு 2051

படிக்க:

1. தஞ்சை மாவட்ட ஆட்சியரின் செயல்முறை ஆணை எண்.7941/அ3/2014, நாள் 28.05.2015.
2. இணை இயக்குநர் (கைவினைஞர் பயிற்சி), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை (பயிற்சி பிரிவு) அவர்களின் செயல்முறை ஆணை எண்.40495/பஅ3/2015, நாள் 21.09.2016.
3. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018.
4. ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை அவர்களின் கடித ந.க.எண்.40495/பஅ3/2015, நாள் 13.10.2018.
5. அரசு கடித (ப) எண்.20515/ப்பி2/2019–1, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(ப்பி2)த்துறை, நாள் 24.05.2019.
6. இயக்குநர்(பொ), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை அவர்களின் கடித ந.க.எண்.40495/பஅ3/2015, நாள் 25.01.2020.
7. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள் 23.01.2020.

-------

ஆணை:–

நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை அவர்கள் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இருட்டறை உதவியாளராகப் பணியாற்றிய போது 23.08.2006 அன்று பணியிடை மரணமடைந்த திரு.எஸ்.ராஜேந்திரன் என்பவரது மனைவி திருமதி.ச.புவனேஸ்வரி என்பவர் முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதம் மூலம் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை (பயிற்சிப்பிரிவு)–க்கு தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரால் பரிந்துரை செய்யப்பட்டு இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறை ஆணையின்படி கருணை

த.பி.பா.,

அடிப்படையில் இளநிலை உதவியாளராக தஞ்சாவூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் பணிநியமனம் வழங்கப்பட்டு தனியர் 26.09.2016 பிற்பகல் முதல் பணியில் சேர்ந்துள்ளார் எனத் தெரிவித்துள்ளார். மேலும், அரசாணை நிலை எண்.80, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 02.03.2016–இல் 01.02.2016 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட பணியாளர்களுக்கு மட்டுமே, துறை அளவில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கிட அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும், மேலும் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் வெளியிடப்பட்டுள்ள ஆணையின்படி இந்நேர்வில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவு பெற வேண்டிய தேவை எழவில்லை. மேற்படி பணியாளர் 26.09.2016 பிற்பகல் பணியில் சேர்ந்ததைத் தொடர்ந்து மேற்கண்ட அரசாணையில் குறிப்பிட்டவாறு 01.02.2016–க்கு பின்னர் தனியர் பணிநியமனம் செய்யப்பட்டதால், தனியரது பணியை இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை பெற்றுத் தருமாறு அரசைக் கோரியிருந்தார்.

2. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பணியிடை மரணமடைந்த திரு.எஸ்.இராஜேந்திரன் என்பவரின் மனைவி திருமதி.ச.புவனேஸ்வரி என்பவருக்கு, கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் சார்நிலை அலுவலகமான தஞ்சாவூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கப்பட்டு அவர் பணியில் சேர்ந்த நாளான 26.09.2016 பிற்பகல் முதல் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறை ஆணையின்படி அவரது பணி, நியமன அலுவலரால் வரன்முறை செய்யப்பட்டதை அரசு பதிவு செய்வதாக ஆணையிடப்பட்டது.

3. தற்போது ஆறாவதாகப் படிக்கப்பட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தனியர் 26.09.2016 பிற்பகல் பணியேற்றுள்ளதால் ஏற்கெனவே பணிநியமன அலுவலரால் பணிவரன்முறை செய்ததை அரசு பதிவு செய்வதாக வெளியிடப்பட்ட கடிதத்தினை ரத்து செய்து தனியருக்கு பணிவரன்முறை ஆணை பிறப்பிக்குமாறு கோரியுள்ளார்.

4. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலித்து, அக்கருத்துருவை ஏற்று பணியிடை மரணமடைந்த திரு.எஸ்.ராஜேந்திரன் (இருட்டறை உதவியாளர்) அவர்களின் மனைவி திருமதி.ச.புவனேஸ்வரி என்பவர் பொருட்டு ஏற்கனவே மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் தனியரின் பணியினை வரன்முறை செய்ததை அரசு பதிவு செய்து கொள்கிறது என்று வெளியிடப்பட்ட ஆணையினை ரத்து செய்வதுடன் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் பயிற்சி பிரிவில் இளநிலை உதவியாளர் பதவியில் பணியமர்த்தப்பட்ட நாளான 26.09.2016 அன்று பிற்பகல் முதல் அவர் அப்பணியிடத்திற்கு தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, தனியர் தனது ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் ஊதிய நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் அவற்றை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார். இது குறித்து தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது.

5. இவ்வரசாணை பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அ.சா.கு.எண்.15477/ஜி2/2020–1, நாள் 02.07.2020–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

பெறுநர்

இயக்குநர்(மு.கூ.பொ.), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, சென்னை–600 032. (இ) (அசல் மூலச் சான்றுகள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையினை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது).

திருமதி.ச.புவனேஸ்வரி, இளநிலை உதவியாளர் (வழி:- இயக்குநர்(மு.கூ.பொ), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, சென்னை–600 032.

சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர்.

நகல்

அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, சென்னை–600 009.

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, சென்னை–600 009.

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(க்யூ/அநமு–2)த்துறை, சென்னை–600 009.

இருப்பு கோப்பு / உதிரி நகல் / சுத்த நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

15/07/2020